**செய்தி வெளியீடு எண்: 407** **நாள்:08.07.2021**

## செய்திவெளியீடு

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்
சென்னை– பெரம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட
எம்.ஜி.ஆர் நகர் மற்றும் பழைய வியாசர்பாடி திட்டப்பகுதிகளில்
ரூ.78.47 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டப்படும்
480 குடியிருப்புகளுக்கான கட்டுமான பணிக்களுக்கு
மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்
திரு.தா.மோ.அன்பரசன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் உதயநிதி ஸ்டாலின்
ஆகியோர் அடிக்கல் நாட்டினர்

* * * * * *

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் சென்னை, பெரம்பூர் சட்டமன்றத்தொகுதிக்கு உட்பட்ட எம்.ஜி.ஆர் நகர் திட்டப்பகுதியில் ரூ.45.31 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள 288 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் பழைய வியாசர்பாடி திட்டப்பகுதியில் ரூ.33.16 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள 192 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகளுக்கு, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர் பாபு முன்னிலையில் சட்டமன்ற உறுப்பினர் திரு.உதயநிதி ஸ்டாலின் மற்றும் மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் ஆகியோரால் இன்று (08.07.2021) அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

விழாவிற்கு தலைமை தாங்கி மாண்புமிகு அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேசியதாவது, “ கழக அரசு பொறுப்பேற்று தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் நடைபெறும் முதல் அடிக்கல் நாட்டு விழா இதுவாகும். எம்.ஜி.ஆர் நகர் திட்டப்பகுதியில் சிதிலமைடந்த நிலையிலிருந்த 180 குடியிருப்புகளை அகற்றி, மறுகட்டுமானத் திட்டத்தின் கீழ் ரூ.45.31 கோடி திட்ட மதிப்பீட்டில் 288 புதிய

குடியிருப்புகள் கட்டுவதற்கும், அதுபோல் பழைய வியாசார்பாடி திட்டப்பகுதியில் 192 சிதிலமடைந்த குடியிருப்புகளை அகற்றி ரூ.33.16 கோடி மதிப்பிட்டில் 192 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணியினை உதயநிதி ஸ்டாலின் அவர்களால் அடிக்கல் நாட்டி இன்று துவக்கி வைக்கப்பட்டதில் நாமெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்படும் குடியிருப்புகள் தனியார் உயர்தர அடுக்குமாடி குடியிருப்புகளில் உள்ளது போல் அனைத்து வசதிகளுடன் கட்டித்தரப்படும். எம்.ஜி.ஆர் நகர் திட்டப்பகுதியில் கட்டப்படும் ஒவ்வொரு குடியிருப்பும் 411 சதுர அடி பரப்பிலும், பழைய வியாசர்பாடி குடியிருப்பு ஒவ்வொன்றும் 400 சதுர அடியிலும் கட்டப்படும். இதில் நவீன வசதிகளுடன் பல்நோக்கு அறை, உறங்கும் அறை, சமையலறை, தனித்தனியே குளியலறை மற்றும் கழிப்பறை ஆகியன அமைய உள்ளது.

ஒவ்வொரு வீட்டிற்கும் மின்சார வசதியுடன், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வாரியத்திலிருந்து பெறப்படும் குடிநீர் ஒரு குடியிருப்பிற்கு 300 லிட்டர் வீதம் வழங்கப்படும். எம்.ஜி. ஆர் நகர் குடியிருப்பில் மின்தூக்கி (Lift) மற்றும் மின்ஆக்கி (Generator) வசதிகள் செய்யப்பட உள்ளன. மழைநீர் கால்வாய்கள் மற்றும் கான்கிரீட் சாலைகள், தெரு விளக்குகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்பாகவே கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டு குடியிருப்புவாசிகளுக்கு வழங்கப்படும்.

எம்.ஜி.ஆர் நகர் திட்டப்பகுதி 1987 ஆம் ஆண்டும், பழைய வியாசர்பாடித் திட்டப்பகுதி 1965 ஆம் ஆண்டும் கட்டப்பட்டது. இவ்வாறு கட்டப்பட்ட வீடுகள் காலமாற்றத்தால் சிதிலமடைந்து வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்அவர்களின் உத்தரவிற்கு இணங்க, சென்னை மாவட்டம் முழுவதும் உள்ள திட்டப்பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் 20 ஆயிரம் வீடுகள் சிதிலமடைந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இத்திட்டப்பகுதிகளை மறுகட்டுமான செய்ய ஏறத்தாழ ரூபாய் 3,200 கோடி தேவைப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது.

ஏழை எளியவர்களிடம் எப்பொழுதும் கருணை காட்டும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதற்கான தொகையை படிப்படியாக வழங்க உறுதி அளித்துள்ளார். இப்பணிகள் அடுத்த 5 ஆண்டுகளில் நிறைவேற்றப்படும்.

சென்னை மாநகரம் குடிசைப்பகுதிகள் இல்லாத நகராமாக மாற்றும் வகையில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 1970 ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டது. அது மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும் கிராமப்புறங்களில் குறிப்பாக தாழ்த்தப்பட்டோர் வசிக்கும் பகுதிகளில் குடிசை வீடுகளே இல்லாமல், கான்கீரிட் வீடுகளாக மாற்றும் உன்னத திட்டமாக அன்னை இந்திரா தொகுப்பு வீடுகள் திட்டத்தை, சென்னைக்கு அருகில் உள்ள காட்டுப்பாக்கம் என்ற கிராமத்தில், அன்றைய ஒன்றிய அமைச்சர் ஜெகஜீவன் ராம் அவர்களை கொண்டு தொடக்கி வைத்தார். இந்த உன்னத திட்டத்தை இந்தியா முழுவதும் செயல்படுத்த வேண்டும் என ஒன்றிய அமைச்சர் அவர்களால் புகழுந்துரைக்கப்பட்டு, இத்திட்டம் இந்தியா முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது. முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மகனான மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இத்திட்டங்களை தந்தையின் வழியிலேயே ஏழை எளிய மக்களுக்கு விரைவாக வழங்குவார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கொரோனா பேரிடர் காலத்திலும் மிக விரைவாக செயல்பட்டு, அமைச்சர்களான எங்களையும் சட்டமன்ற உறுப்பினர்களையும் முடுக்கி விட்டு கொரோனா தடுப்பு பணிகளை விரைவாக செயல்படுத்தி தமிழக மக்களை கொரோனாவிலிருந்து காப்பாற்றியுள்ளார். தற்பொழுது கொரோனா தொற்றும் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு, மக்களுக்கான நலத்திட்ட பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. எந்த நம்பிகையோடு இந்த ஆட்சியை நீங்கள் கொண்டு வந்தீர்களோ அந்த ஏழை எளிய மக்களுக்கு பயனளிக்கும் வகையில் பொற்கால ஆட்சியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் வழங்குவார்கள். ”

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.ம.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள் திட்டவிளக்கவுரை ஆற்றினார். வடசென்னை நாடளுமன்ற உறுப்பினர் திரு.கலாநிதி வீராசாமி , பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.சேகர், வாரியத் தலைமைப் பொறியாளர் திரு.இராமசேதுபதி, மேற்பார்வைப் பொறியாளர் திரு.சு.சுந்தர்ராஜன், நிர்வாகப் பொறியாளர் திரு.எல்.மனோகரன், மற்றும் அதிகாரிகள் கலந்துக் கொண்டனர்.

அதனைத்தொடர்ந்து மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர் பாபு மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு.உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் வியாசர்பாடியில் உள்ள டி.டி.பிளாக் திட்டப்பகுதியில் ரூ.60.60 கோடி திட்ட மதிப்பீட்டில் புதியதாகக்கட்டப்பட்டு வரும் 468 அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**